# தலைநகரில் குவிந்து கிடக்கும் வீடற்றவர்கள்

## - டிபிகேஎல் நடவடிக்கை

கோலாலம்பூர், பிப். 10-
நாட்டின் தலைநகரமான கோலாலம்பூரில் வீடற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நாட்டின் முக்கிய தளத்தில் வீடற்றவர்கள் சாலையோரங்களில் படுத்திருப்பது அசௌகரியமான சூழலை ஏற்படுத்துகின்றன.
இந்தப் பிரச்சினையை முறையாக கையாளும் விதமாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் டிபிகேஎல் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக பிரதமர் துறையின் கூட்டரசு பிரதேச அமைச்சர் ஸாலிஹா முஸ்தாபா கூறினார்.
பல்வேறு அமலாக்க தரப்பினருடன் இணைந்து, வீடற்றவர்களை காப்பாற்றும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
வீடுகளின்றி சாலைகளில் தூங்குபவர்களில் பல பிரிவுகள் உள்ளன. சிலர் அந்நிய நாட்டை சேர்ந்தவர்களாகவும் ஐக்கிய நாடுகளின் அகதி அட்டையை வைத்திருப்பவர்களாகவும் போதை பித்தர்களாகவும் உள்ளனர்.

ஆசியான் உச்சநிலை மாநாட்டிற்கு இம்முறை மலேசியா தலைமையேற்றுள்ளது.
கோலாலம்பூர், புத்ராஜெயாவில் 180க்கும் அதிகமான நிகழ்ச்சிகளை நடத்த திட்டம் உள்ளன. அதோடு, அதிகமான சுற்றுப்



பயணிகளை ஈர்க்கும் தளமாக உள்ளது.
ஆசிய நாடுகளின் பேராளர்கள் மத்தியில் மலேசியாவின் தூய்மை நற்பெயரை தற்காத்து கொள்ளும் திட்டமாக இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஸாலிஹா முஸ்தாபா கூறினார்.